**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ம் நாள் புதன்கிழமை**

**I.A.No.05/2026 In O.S.No.57/2023**

1. செல்வம்
2. தமிழரசி ... மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள்

**//எதிராக//**

கலிங்கன் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 06.03.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ஜாபர் சேட் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.M.செந்தில் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வா.சா.1 ஐ மீண்டும் அழைக்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 17 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி. இம்மனுவை 2ம் பிரதிவாதிக்காகவும் தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கானது வாதி தரப்பு 1ம் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய 03.09.2025 அன்று வாய்தா போடப்பட்டிருந்தது. வாதி, பிரதிவாதிகளுக்கு இடையே உள்ள சொத்து சம்பந்தமாக அ.வ.எண்.82/2020 மற்றும் 153/2020 என்ற வழக்குகள் குளித்தலை, சார்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. மேற்படி வழக்குகள் குறித்து ஆவணங்கள் சேகரிக்க சிறிது காலதாமதமாகி விட்டது. மேலும் 03.09.2025 அன்று மனுதாரருக்கு நெருங்கிய நண்பர் இறந்து விட்டதால் அன்றைய தினம் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டது. எனவே குறுக்கு விசாரணை அன்றைய தினம்

முடிக்கப்பட்டது. மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே வா.சா.1 ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய அழைக்க அனுமதிக்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

2) இவ்வழக்கானது வாதி தரப்பு சாட்சி 1 ஐ குறுக்கு விசாரணை செய்து வாதி தரப்பில் கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இந்நிலையில் வா.சா.1 ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்யக் கோருவது ஏற்கத்தக்கதாக இல்லை. குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் குறித்து ஆவணம் சேகரிப்பதாக சொல்வது பொய்யான சங்கதிகள் ஆகும். மேலும் 03.09.2025 அன்று மனுதாரர் நண்பர் இறந்து விட்டதாக சொல்வதை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். வேண்டுமென்றே எவ்வித காரணங்களும் இன்றி வாதி தரப்பு சாட்சி 1 ன் குறுக்கு விசாரணையை முடிக்க அனுமதித்து விட்டு தற்போது வா.சா.1 ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென கேட்டிருப்பது ஏற்கத்தக்கதாக இல்லை. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1 ஐ முழுமையாக குறுக்கு விசாரணை செய்ய இயலாமல் வா.சா.1 ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு விட்டதாகவும் எனவே வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும்படி வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி மனுவிற்கு ஆட்சேபணை செய்யப்பட்டது. இவ்வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கீழமை நீதிமன்றத்தில் தரப்பினர்களுக்கு முழு சந்தர்ப்பம் வழங்கப்படாவிட்டால் தரப்பினர்கள் தங்கள் வழக்கை முழுமையாக நிரூபிக்க இயலாமல் போய் விடும் என்பதால் இம்மனுவை நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்படலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக**

இம்மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு ரூ.1000/–த்தை செலவுத்தொகையாக 17.03.2026 ம் தேதிக்குள் வழங்க வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடியாகும் என உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 18.03.2026

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

<u>**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>

–இல்லை–

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>

–இல்லை–

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

*********************************

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**I.A.No. 05/2026**
**in**
**O.S.No. 57/2023**

**DRAFT / FAIR ORDER**

**D.D.11.03.2026**

*********************************